# உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்,விழுப்புரம் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை: திரு. ச. ரவிசந்திரன்.

ந.க.அ3/5339/2022 நாள்: 07.10.2022

பொருள்: பட்டா மாற்றம் - விழுப்புரம் மாவட்டம் - வானூர் வட்டம் - பட்டா எண். 704 - S.F. No. 426/1E1 9.72 ஹெக்டேர்ஸ் நிலம் - ஆரோவில் பவுண்டேஷன் நிறுவனத்திற்கு சொந்தமானது — தவறுதலாக வேறு நபர் பெயரில் பட்டா மாற்றப்பட்டது — ரத்து செய்திட கோரியது — விசாரணை செய்யப்பட உள்ளது - பழைய நிலையே தொடர ஆணையிடுதல்

பார்வை : 1)தனி அலுவலர் (வருவாய்), ஆரோவில் பவுண்டேஷன் நிறுவனத்தினரின் மனு எண். AF/LA/194/22/ நாள்: 21.7.2022

2) ஆரோவில் காவல் ஆய்வாளர் கடிதம் ந.க. எண். 26/F2 PS/2022, நாள்:12.09.2022

&&&&

**ஆணை:**

வானூர் வட்டம், இரும்பை கிராமம், பட்டா எண். 704 ரி.ச. 426/1இ1 9.72 ஹெக்டேர் நிலம் ஆரோவில் பவுண்டேஷன் நிறுவனத்திற்கு சொந்தமானதை தவறுதலாக வேறு நபர்கள் பெயரில் பட்டாவாக உள்ளதை ரத்து செய்திட கோரி பார்வை 1ல் கண்டவாறு ஆரோவில் பவுண்டேஷன் நிறுவனத்தின் தனி அலுவலர் அவர்கள் மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பாக ஆரோவில் காவல் ஆய்வாளர் பார்வை 2ல் கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். விக்கிரவாண்டி வட்டத்தை சார்ந்த திரு. பி.கே. சுப்பிரமணி த/பெ. பெரியண்ணன் மற்றும் ஆரோவில் பவுண்டேஷன் (Working Committee) இரு தரப்பினர்களுக்குள் வானூர் வட்டம், இரும்பை கிராமத்தில் சர்வே எண். 426/E 27 ஏக்கர் 17 செண்ட் நிலம் (பட்டா எண். 704) திரு. வெங்கட்ராம நாயுடு அவர்களின் பெயரில் 30.09.1984ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி திரு. வெங்கட்ராம நாயுடு அவர்களிடமிருந்து 19.08.1992 அன்று சர்வே எண். 426/1E விருந்து 21 ஏக்கர் நிலத்தை ஆரோவில் பவுண்டேஷனுக்கு விற்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள நிலத்தை 6 ஏக்கர் 17 செண்ட் நிலத்தை வெங்கட்ராம நாயுடு அவரின் வாரிசுகள் பிரபாகர் மற்றும் ஸ்ரீதர் ஆகியோர்கள் அனுபவித்து வந்ததாகவும் பின்பு மேற்படி பிரபாகரிடமிருந்து விக்கிரவாண்டி வட்டத்தைச் சேர்ந்த திரு. பி.கே. சுப்பிரமணி த/பெ. பெரியண்ணன் என்பவர் 2 ஏக்கர் 40 செண்ட் மற்றும் 42 செண்ட் ஆக மொத்தம் 2.82 செண்ட்(பட்டா எண். 3207/2022) நிலத்தினை கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும், இந்நிலையில் அவரின் அனுபவ இடத்தில் சுற்று வேலி அமைத்தபோது மேற்படி ஆரோவில் பவுண்டேஷன் (Working Committee) நிர்வாகத்தினரிடம் பிரச்சினையில் அடிக்கடி தலையிட்டு எவ்வித பிரச்சினையும் ஏற்படாதவாறு தற்காலிகமாக சமாதான பேச்சு வார்த்தை நடத்தி அனுப்பி வைத்தனர் என்றும், இந்நிலையில் கடந்த 06.09.2022ம் தேதி பி.கே. சுப்பிரமணி என்பவர் தன்னுடைய ஆட்களுடன்

மேற்படி இடத்திற்கு வந்து வேலி அமைக்க தூண் நட முயன்றபோது **மேற்படி ஆரோவில் நிர்வாகத்தினர் மற்றும் வெளிநாட்டினர் தடுத்து சாலை மறியலில் ஈடுபட்டனர் என்றும், அப்போது இரு தரப்பினருக்கும் வாய் தகராறு ஏற்பட்டது என்றும், இதனிடையில் பி.கே. சுப்பிரமணி என்பவர் கொடுத்த புகாரின்பேரில் நடவடிக்கை எடுத்த நிலையில் இப்பிரச்சினையால் சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு வருகிறது** என்றும், மேலும், இதில் ஆரொவில் நிர்வாகத்தரப்பினர் மேற்படி பி.கே. சுப்பிரமணி அவர்கள் **கிரையம் செய்த பத்திரமானது போலி** எனவும் மோசடியாக பத்திரம் பதிவு செய்துள்ளார் எனவும் குற்றச்சாட்டு எழுப்புகின்றனர் என்றும், இது சம்மந்தமாக ஆரோவில் பவுண்டேஷன் வருவாய் கோட்டாட்சியரிடம் 16.6.2022 அன்று கொடுத்த மனுவின்படி விசாரணை நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி வெங்கட்ராம நாயுடு அவர்களிடமிருந்து 19.08.2022 அன்று சர்வே எண். 426/1E லிருந்து 21 ஏக்கர் நிலத்தை ஆரோவில் பவுண்டேஷனுக்கு விற்கப்பட்டுள்ளதை மாவட்ட தலைமை சர்வேயர் மூலம் அளவீடு செய்து அறிக்கை வழங்கி ஆரோவில் நிர்வாகத்திற்கு உரிய இடத்தினைஅடையாளம் காட்டுமாறு கோரிக்கை விடுத்து ஆரோவில் காவல் நிலைய ஆய்வாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி நிகழ்வுகளினால், ஆரோவில் நிர்வாகத்தின் கீழ் வசித்து வரும் வெளிநாட்டவர்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் இடையே **பதற்ற நிலை ஏற்பட்டு வருவதை தவிர்க்கும் பொருட்டும், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனையை தவிர்க்கும் பொருட்டும்,** வானூர் வட்டம், இரும்பை கிராம பட்டா எண். 704 ரி.ச. 426/1இ1 ல் 9.72 ஹெக்டேரில் எவ்வித அனுபவமோ மாறுதல்களோ கட்டுமானப்பணிகளோ செய்யக் கூடாது என இந்த ஆணை மூலம் தடை விதிக்கப்படுகிறது. மேலும், ஆரோவில் நிர்வாகத்தால் அளிக்கப்பட்ட மனுவின் மீது இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை, **பழைய நிலையே (Status-Quo) தொடர வேண்டும்** என விக்கிரவாண்டி வட்டத்தை சார்ந்த பி.கே. சுப்பிரமணி என்பவருக்கும், ஆரோவில் பவுண்டேஷன் நிறுவனத்தின் தனி அலுவலருக்கும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

07.10.22

**உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும்**
**வருவாய் கோட்டாட்சியர்**
**விழுப்புரம்**

பெறுநர்

1) திரு.பி.கே. சுப்பிரமணி
த/பெ. பெரியண்ணன், இரும்பை கிராமம், வானூர் வட்டம்
(நிலையான முகவரி விக்கிரவாண்டி வட்டம்)

2) தனி அலுவலர்,
ஆரோவில் பவுண்டேஷன் நிறுவனத்தினர்,
வானூர் வட்டம்.

நகல்: காவல் ஆய்வாளர், ஆரோவில் காவல் நிலையம்.
நகல்: வட்டாட்சியர், வானூர்
நகல்: மாவட்ட காவல் கண்காணிப்பாளர், விழுப்புரம் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.